தயவுசெய்து சொல்லாமல் இருப்பது நல்லது. இம்மாதிரி செலவினங்களுக்கு வழிவகை வைக்காமல், ஒத்துழைப்புத் தருகிற அளவுக்கு மாண்புமிகு திரு. ஞானசேகரன் போன்றவர்கள்— அவருக்குப் பெயரே ஞானசேகரன் என்று இருப்பதன் காரணமாக, 'சேகரம்' என்றால் கடல், 'ஞானம்' என்றால் அறிவு; அறிவே கடலாக அவர் இருப்பதன் காரணமாக--அவர்கள் பெரும் ஒத்துழைப்பும், உதவியும் தருவார் என்கிற நிலைமையில், இப்படிப்பட்ட நடவடிக்கைகளுக்கு எல்லோரும் ஒத்துழைப்புத் தந்தால்தான், மாநிலத்தினுடைய பொருளாதார நிலையை வளர்ச்சித் திட்டங்களுக்கு, மக்களுடைய வாழ்வுத் திட்டங்களுக்குப் பயன்படுத்துவதற்கு எதிர்காலத்திலே பயன் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல்; திரு. கே. முனிவெங்கடப்பன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாகக் குழுவின் 145 முதல் 147 வரையிலான மூன்று அறிக்கைகளை இப்பேரவைக்குச் சமர்ப்பிக்கிறேன்.

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்).

(அ) இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) வரி விதிப்பு (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 1993-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) வரிவிதிப்பு (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1993-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) வரிவிதிப்பு (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

1993 டிசம்பர் 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்; தீர்மானம் நிறைவேறியது (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) திரையரங்குகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: 1993-ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (முறைப்படுத்துதல்) திருத்தச்சட்டமுன்வடிவு. மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்.

* **மாண்புமிகு திரு. மு. தென்னவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1993-ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்பேரே அதிகம்; தீர்மானம் நிறைவேறியது (மேசையைத் தட்டும் ஒலி). மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்.

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS